**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண். 46/2024</u>**

பெயர் : சகுந்தலா க/பெ. ஞானராஜ் நாள் : 09.07.2026

**<u>வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது இடத்தின் காம்பவுன்ட் சுவர் வரை உள்ள இடத்திற்கும் வடபுறமாக 2 அடி சந்தும் அதற்கு வடபுறமாக சரவணமுதலியாருக்கு பாத்தியப்பட்டது வீடு உள்ளது. எனது இடத்தின் காம்பவுன்ட் சுவருக்கு மேல்புறம் உள்ள இடத்திற்கு வடபுறமாக அம்மணியம்மாள் பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். தற்போது சாட்சி எனது இடம் காம்பவுன்டிலிருந்து 5 அடி மேல்புறமாக உள்ளது, அதற்கு அடுத்து தான் அம்மணியம்மாள் இடம் வடபுரமாக உள்ளது. எனது இடத்தின் காம்பவுன்ட் சுவருக்கு மேல்புறம் உள்ள இடத்திற்கும் வடபுறமாக அம்மணியம்மாள் வீடு உள்ளது என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக 5 அடி மேல்புறமாக அம்மணியம்மாள் வீடு உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.11 ஆவணத்தில் அன்புமலர், பொன்னுசாமி ஆகியவர்கள் பாகம் பிரிவினை செய்த பத்திரத்தில் பொன்னுசாமிக்கு பி ஷெட்யூல் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை, ஏ ஷெட்யூல் தான் பொன்னுசாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. செக்குப்பந்தியில் சரவண முதலியார் பாகத்திற்கும், 2 அடி அகல பொது சந்துக்கும், அம்மணியம்மாள் பாக சொத்திற்கும் தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12ஆவணத்தில் பொன்னுசாமி என்பவர் குழந்தைசாமிக்கு கிரையம் செய்து கொடுத்த பத்திரத்தில் சரவணமுதலியார் வீடு வகையராவிற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் உள்ளது.

3.வா.சா.ஆ.13ஆவணத்தில் குழந்தைசாமி என்பவர் முத்துலட்சுமிக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் சரவணமுதலியார் வீடு வகையராவிற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் முத்துலட்சுமியிடம் இருந்து எனது கணவர் கிரையம் பெற்ற ஆவணத்திலும் சரவணமுதலியார் வீடு வகையராவிற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது இடத்தின் காம்பவுன்டுக்கு மேல்புறமாக எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனது இடத்தின் காம்பவுன்டுக்கு மேல்புறமாக உள்ள சொத்து பிரதிவாதிக்கு

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.07.09 18:26:11 +0530

பாத்தியப்பட்டது என்றால் எங்கள் இடம் போக பிரதிவாதிக்கு பாத்தியப் பட்டது.

4. நான் பொய்யாக சங்கதிகளை சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் சொல்லியுள்ள வழக்கு மூலம் தவறானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.07.09 18:26:14 +0530